ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 1798/46 - 2013 පෙබරවාරි 21 වැනි බ්‍රහස්පතින්දා - 2013.02.21
*1798/46 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 21 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

குறிப்பு இல.: திபிசெ/1/8/3/36 கா.சு.
காணி அமைச்சின் குறிப்பு இல. : எல்டீ/05/2010/எச்டபிள்யூ/162.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதைக் காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :

மேல் மாகாணத்தில், கொழும்பு மாவட்டத்தில், திம்பிரிகஸ்யாய பிரதேச செயலாளர் பிரிவில், கொழும்பு மாநகர சபை எல்லைக்கு உட்பட்ட பிரிவு இல.18, வெள்ளவத்தை தெற்கு கிராம சேவகர் பிரிவில் உள்ள, வெள்ளவத்தை தெற்குக் கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவை அதிபதியினால் தயாரிக்கப்பட்ட 2013.01.08 ஆம் திகதிய ஆரம்ப வரைபட இல. கொ.9307 இல் துண்டு இல.8578, 8579, 8580, 8581, 8582, 8583, 8584, 8585 மற்றும் 8586 வரை விபரிக்கப்பட்டுள்ள சுமார் 0.3852 ஹெக்டயார் மொத்த விஸ்தீரணமுடைய ஒன்பது (09) காணித் துண்டுகளின் மேலதிக விபரங்கள் பின்வருமாறு :

*01.* **துண்டு இல. *8578***
காணியின் பெயர் : மஹாவெள்ளவத்தை ; விபரம்: திறந்த தரிசு நிலம்; உரிமை கோருபவர் : அரசு ; விஸ்தீரணம் : 0.0122 ஹெக்டயார்.

*02.* **துண்டு இல. *8579***
காணியின் பெயர் : மஹாவெள்ளவத்தை, வரி மதிப்பீட்டு இல.61 ஐக் கொண்ட காணயின் பகுதி, இராமகிருஷ்ணா வீதி ; விபரம்: தோட்டம், நிரந்தரக் கட்டிடத்தின் பகுதி ; உரிமை கோருபவர் : அரசு ; விஸ்தீரணம்: 0.0205 ஹெக்டயார்.

*03.* **துண்டு இல. *8580***
காணியின் பெயர் : மஹாவெள்ளவத்தை, வரி மதிப்பீட்டு இல.61A ஐக் கொண்ட காணியின் பகுதி, இராமகிருஷ்ணா வீதி ; விபரம்: வீதி, நிரந்தரக் கட்டிடத்தின் பகுதி ; உரிமை கோருபவர் : அரசு ; விஸ்தீரணம்: 0.0221 ஹெக்டயார்.

*04.* **துண்டு இல. *8581***
காணியின் பெயர் : மஹாவெள்ளவத்தை ; விபரம்: திறந்த தரிசு நிலம்; உரிமை கோருபவர் : அரசு ; விஸ்தீரணம் : 0.0113 ஹெக்டயார்.

*05.* **துண்டு இல. *8582***
காணியின் பெயர் : மஹாவெள்ளவத்தை ; விபரம்: வீதி ; உரிமை கோருபவர் : அரசு ; விஸ்தீரணம் : 0.0107 ஹெக்டயார்.

*06.* **துண்டு இல. *8583***
காணியின் பெயர் : மஹாவெள்ளவத்தை ; விபரம்: தோட்டம் ; உரிமை கோருபவர் : அரசு ; விஸ்தீரணம் : 0.0286 ஹெக்டயார்.

*07.* **துண்டு இல. *8584***
காணியின் பெயர் : மஹாவெள்ளவத்தை ; விபரம்: அணுகு வீதி ; உரிமை கோருபவர் : அரசு ; விஸ்தீரணம் : 0.0064 ஹெக்டயார்.

*08.* **துண்டு இல. *8585***
காணியின் பெயர் : மஹாவெள்ளவத்தை, வரி மதிப்பீட்டு இல.53/10 ஐக் கொண்ட காணியின் பகுதி, இராமகிருஷ்ணா வீதி ; விபரம்: தோட்டம்; உரிமை கோருபவர் : அரசு ; விஸ்தீரணம் : 0.0310 ஹெக்டயார்.

*09.* **துண்டு இல. *8586***
காணியின் பெயர் : மஹாவெள்ளவத்தை ; விபரம்: தோட்டம், நிரந்தரக் கட்டிடமொன்று மற்றும் ஐந்து நிரந்தரக் கட்டிடங்களின் பகுதி; உரிமை கோருபவர் : அரசு ; விஸ்தீரணம் : 0.2424 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2013 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 12 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு திம்பிரிகஸ்யாய பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும்படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2013 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 12 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

கீதாமணி சீ.கருணாரத்ன,
பிரதேச செயலாளர்,
திம்பிரிகஸ்யாய.

பிரதேச செயலகம்,
திம்பிரிகஸ்யாய,
2013.02.20.

03-470